S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions
Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கண் வைத்திய நிபுணர்கள்
பரிசோதனை செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாகக் கொடுப்பவர்கள்
★ ★ ★
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 31 வியாழக்கிழமை [17-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 317

# ஆளும் கட்சியின் 45 எம்.பிக்களுக்கு அமைச்சர்களின் பொறுப்புகள்!

## நாடாளுமன்ற உறுப்பினர்களை சமாளிக்க பிரேமா புதிய திட்டம்

கொழும்பு, அக்டோபர். 17

ஆளும் கட்சிக்குள் அதிருப்தியடைந்து தமக்கு எதிராகத் திரும்புவார்கள் எனத் தாம் சந்தேகிக்கும் பல எம்.பிக்களைச் சமாளித்து, அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக புதிய திட்டம் ஒன்றை ஜனாதிபதி பிரேமதாஸா செயற்படுத்தியிருக்கிறார்.

இந்தத் திட்டத்தின்படி அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் 16 பேரின் பொறுப்புகளை அரச தரப்பு எம்.பிக்கள் 45 பேருக்கு அவர் பகிர்ந்து வழங்கியிருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

புதிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளும் அரச தரப்பு எம். பிக்கள் 45 பேரின் பெயர், விவரங்களை கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரேமதாஸா வெளியிட்டார்.

ஜனாதிபதி பிரேமதாஸாவின் வேண்டுகோளுக்கு இணங்க—

அபிவிருத்தித் திட்டங்கள் அமுல் செய்யப்படுவதையும், உற்பத்தி சார்ந்த வேலைத் திட்டங்களின் செயற்பாடுகளையும் இந்த எம். பிக்கள் கண்காணித்து, சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு உதவுவதற்கு முன்வந்திருக்கிறார்கள் என்று அரச தரப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பரவலாக ஹெலித் தாக்கு!

யாழ்ப்பாணம், அக். 17

குடாநாட்டில் நேற்றும் ஹெலிகள் பரவலாக தாக்குதல்களை நடத்தின.

வடமராட்சி, தென்மராட்சி, மற்றும் தீவுப்பகுதியிலும் ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் சந்ததாளையில் ஹெலி நடத்திய தாக்குதலில் அப்பாவியான கர்ப்பிணித் தாய் ஒருவர் உயிரிழந்தார் என்பது தெரிந்ததே. (ஓ)

## பி.ப. 3 மணிக்குப் பின் வித்தியாரம்பம்

யாழ்ப்பாணம், அக். 17

நவராத்திரி விழா முடிந்து இன்று விஜயதசமி கொண்டாடப்படுகிறது: ஆலயங்களில் மானம்பு வைபவமும் இன்று நடைபெறும்.

விஜயதசமி இன்று பிற்பகல் 1 மணி 03 நிமிடத்துக்கு ஆரம்பமாகி நாளை பிற்பகல் 3 மணி 18 நிமிடம் வரை தொடர்கிறது.

இன்று நண்பகல் 1-30 மணி தொடக்கம் 3 மணி வரை ராகு காலம் இருப்பதால், அந்த நேரத்தைத் தவிர்த்து, பிற்பகல் 3 மணிக்குப் பின்னரே வித்தியாரம்பம் மற்றும் நற்கருமங்கள், மங்கள

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தாக்குதல் நடவடிக்கை குடாநாட்டில் தீவிரம்

யாழ்ப்பாணம், அக். 17

குடாநாட்டில் படையினரின் தாக்குதல் நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக தீவிரமாகி வருகின்றன.

ஸ்ரீலங்காப் படை முகாம்களில் இருந்து இப்போது தான் தவறாமல், குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

கடற்பகுதிகளில் இருந்தும் படையினர் கண்டபடி மீறி இத் தாக்குதல்களை நடத்துகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு 8 மணி தொடக்கம் வெற்றிலைக்கேணி, ஆனையிறவு முகாம்களில் இருந்து பரவலாக ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்றதாக எமது தென்ம

[3 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகரில் படையினர் இரவில் முன்னேற முயற்சி

### புலிகள் எதிர்த்துத் தாக்கினர்

யாழ்ப்பாணம், அக். 17

காரைநகர் வலந்தலைச் சந்தியில் இருந்து நேற்று முன்தினம் (செவ்வாய்) இரவு 10 மணியளவில் படையினர் முன்னேற முயன்றனர்.

கடும் ஷெல் தாக்குதல்களையும் சரமாரியான வேட்டுக்களையும் தீர்த்தபடி, இரண்டாம் பரலம்வரை முன்னேறிய படையினர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர்.

சுமார் 20 நிமிடங்கள் வரை நடந்த கடும் மோதல்களின் பின்னர் படையினர் பின்வாங்கி முகாமைச் சென்றடைந்தனர்.

அதன் பின்னர் முகாமில் இருந்து பொன்னாலைச் சந்தி மற்றும் களபூமி பகுதிகளை நோக்கி படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். (ஓ-15)

## ஆனையிறவிலும் சண்டை

ஆனையிறவு இராணுவத்தினரும் நேற்று நண்பகல் 12 மணியளவில், அவர்களது காவலரண் பகுதியில் இருந்து முன்னேற முயன்றனர்.

அப்போது விடுதலைப் புலிகள் போராளிகள் கடும் எதிர்த் தாக்குதல்களை நடத்தினர். அதை அடுத்து இராணுவத்தினர் பின்வாங்கினர்.

இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (ஓ)

## தீவுப் பகுதி எங்கும் ஹெலி நோட்டம்

புங்குடுதீவு, அக். 17

தீவுப்பகுதி எங்கும் நேற்றுக் காலை முதல் மாலை வரை ஹெலிகள் சுற்றிச் சுற்றி நோட்டமிட்டபடி இருந்தன. கடற்பகுதிகளையும் மற்றும் சில பகுதிகளையும் ஹெலிகள் தாழப் பறந்து நோட்டமிட்டன.

இதனால் தீவுப்பகுதி மக்கள் பெரும் பதற்றமும், பீதியும் அடைந்தனர். புங்குடுதீவு, வேலணை, புளியங்கூடல், சாட்டி ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து யாழ். நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். (ஓ-131)

## இராணுவ நடவடிக்கைகள் தீவகத்தில் இல்லையாம்!

### கொழும்பில் அதிகாரி கூறுகிறார்

கொழும்பு, அக். 17

யாழ். மாவட்டத்திலுள்ள தீவுப் பகுதிகளில் யுத்த முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தீவுப் பகுதிகளில் ஆயுதப் படையினர் பெருமளவில் குவிக்கப்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

தீவுப்பகுதிகளைச் சுற்றியுள்ள கடற்பகுதியில், விடுதலைப் புலிகள் கண்ணி வெடிகள் வைப்பதைத் தடுப்பதற்காக, பெருமளவில் துருப்புகள் தீவுப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளதால் உள்ளூர் மக்கள் யாழ்ப்பாணத்தில் தஞ்சம் புகநிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்றும்—

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மூச்சந்தி முரளி



உத்தமர் எலும்புத் துண்டு வீசிறார் போல.....!

## வடமராட்சி மக்களுக்கு விசேட அறிவிப்பு

கொழும்பு, அக். 17

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள சகல மக்களும்—

இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்னர்—

அப்பகுதியில் உள்ள கோவில்கள் மற்றும் தேவாலயங்களில் சென்று தங்கியிருக்குமாறு—

ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமையகம் நேற்றிரவு விடுத்த விசேட அறிவித்தல் ஒன்றின் மூலம் கேட்டிருக்கிறது. (உ-5)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், அக். 17

ஆனையிறவு இராணுவத்தினருடன் நேற்று நடந்த சண்டையில் திரத்துடன் மோதி 2 ஆவது லெப்டினன்ட் சார்ள்ஸ் (நா. செல்வேந்திரன் — மட்டுவில்) வீரமரணமடைந்தார். (ஓ)

## திருகோணமடு காவல் முகாம் வீழ்ந்தது!

கொழும்பு, அக். 17

கிழக்கு மாகாணம் திருகோணமடு என்னும் இடத்தில் இருந்த இராணுவக் காவல் முகாம் ஒன்றை இராணுவத்திடமிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றினர் என்று ஏஜென்ஸிச்செய்திகள் தெரிவித்தன.

திரண்டு வந்த விடுதலைப் புலிகள் அதிகாலை நடத்திய திடீர் தாக்குதலின் போது காவல் முகாமில் இராணுவத்திற்கு உதவியாக இருந்த ஒருவர் உயிரிழந்தார் என்றும்—

இரண்டு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர் என்றும் கூறப்படுவதாக வெளிநாட்டு வானொலி தெரிவித்தது. (உ-எ)

## மணலாறு மாவட்டத்தில் கடும் விமானக் குண்டு வீச்சு!

### 3 பொம்மர்கள், 2 அவ்ரோக்கள் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 17

மணலாறு மாவட்டத்தில் கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில், ஸ்ரீலங்கா விமானப் படையினர் கடும் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தினர்.

மூன்று பொம்மர்கள், இரு அவ்ரோ விமானங்கள் என்பன மூர்க்கத்தனமாக குண்டுகளைப் பொழிந்து தள்ளின.

செம்மலை, தண்ணீரூற்று, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, அளம்பில் ஆகிய பகுதிகளில் பரவலாக தாக்குதல்கள் இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குண்டுவீச்சினால் தமிழ் மக்களின் உடைமைகளுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ள தாகவும் தெரியவருகிறது.

## 18 மாத ஊக்குவிப்புப் படி ஆசிரியருக்குக் கிடைக்கும்

யாழ்ப்பாணம், அக். 17

ஆபத்தான வேளையில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புப் படி (Risk Allowance) யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கான நிதி யாழ் கல்வி அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளது.

பதினெட்டு மாத காலத்துக்குரிய மேற்படி ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவு இன்னும் சில தினங்களில் யாழ். கல்வி அலுவலக ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதற்கான வேலைகளில் யாழ். கல்வி அலுவலகத்தினர் இப்போது ஈடுபட்டு வருகின்றனர்.

ஆசிரியர்களுக்குரிய கொடுப்பனவுகள் கோட்டரீதியாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## இந்திய மீன்பிடிப் படகு மீது ஸ்ரீலங்கா கடற்படை சூடு!

சென்னை, அக். 17

இலங்கைக் கடற்படை கச்சதீவு அருகே இந்திய மீன்பிடிப்படகு ஒன்றின் மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இந்திய செய்தி நிறுவனம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் காலை நடந்த இந்தத் தாக்குதலில் படகு சிறிது சேதமடைந்தது. ஆயினும் மீனவர்கள் தமது படகுடன் இராமேஸ்வரம் திரும்பி விட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (த)

## படையினர் எட்டுப் பேரை புலிகள் சிறைபிடித்தனராம்

### ராணுவ அதிகாரி நேற்றுத் தகவல்

கொழும்பு, அக். 17

முல்லைத்தீவில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த படையினரில் 8 பேரை விடுதலைப் புலிகள் சிறைப் பிடித்து வைத்துள்ளனர் என்று இராணுவ அதிகாரி ஒருவர் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

சிறை பிடிக்கப்பட்ட 8 பேரில் ஒருவர் இராணுவ அதிகாரி என்றும் அவர் கூறினார்.

முல்லைத்தீவு 8-ஆம் கட்டை இராணுவ மினி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சபாநாயகர் முகம்மது ராஜினாமா செய்யவில்லை

### இந்தியத் தூதர் மன்னிப்புக் கோரினார்

கொழும்பு, அக். 17

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது தமது பதவியை ராஜினாமாச் செய்யவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தாம் ராஜினாமாச் செய்ததாக வெளிவந்த செய்திகள் தவறானவை என்று சபாநாயகர் முகம்மதுவே மறுத்துள்ளார்.

அல்ஹாஜ் முகம்மது தமது பதவியை ராஜினாமாச் செய்து கடிதம் சமர்ப்பித்து விட்டதாகவும், ஆனால் ஜனாதிபதி இன்னும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும்—இந்திய வானொலியும் தூரதர்சனும் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தன.

ஆனால்—

[3 ஆம் பக்கம் பார்க்க]

## இவ்வருட மாவீரர் வாரம்; ஏற்பாடுகள் நடக்கின்றன

யாழ்ப்பாணம், அக். 17

இவ்வருடம் மாவீரர் வாரத்தை உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகளின் மக்கள் உறவு — கௌரவிப்பு முன்னெடுப்புப் பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான காலத்தை தமிழ்ப் பகுதி எங்கும் மாவீரர்—வாரமாக அனுஷ்டிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

இது தொடர்பாக வடக்கில் கிராமிய ரீதியாக செயற்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவீரர் வார ஏற்பாடுகளைக் கவனிக்க திருநெல்வேலியில் விசேட பணிமனை ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

மாவீரர் வாரம் தொடர்பான அலங்கார வேலைகள், பொது அறிவுப் போட்டி, மாவீரர்களின் பெற்றோரை கௌரவித்தல், தேசியக் கொடி மற்றும் மாவீரர் சுடர் ஏற்றுதல் ஆகியவற்றை ஒழுங்காக மேற்கொள்வதற்கு இ—

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பூநகரியைச் சேர்ந்த பால சுப்பிரமணியம் பாலதேசன் என்பவரின் 741470900V இலக்கமுள்ள அடையாள அட்டை 6-10 1991 அன்று சாவகச்சேரி மிடலண்ட் வீதியோவிற்கும், "மம்மி. டி" புடவை மாளிகைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து "மம்மிட்டி"யில் கொடுத்துதவவும். (4347)

அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கைச் சேர்ந்த த. சதிரவேலு என்பவரின் கைப்பை இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதி கிளைக்கும் வீட்டிற்கும் இடையில் வங்கி காசோலை, புத்தகம், மூக்குக் கண்ணாடி, முக்கிய திறப்புக் கோர்வைகளுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [18133]

## ஆண்டு - 4, 5

பிரபல பாடசாலை அனுமதி புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஆண்டு 4 வினாத்தாள் 20-10-1991 இல் வெளியிடப்படும். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (18468)

## ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ் ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும் பியூட்டா என்ரப்பிறைசஸ் 39/17, மின்சார நிலைய வீதி, 8ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [இ/0694]

## சென். பற்றிக்ஸ் பரிசளிப்பு நாளை

கொழும்புத்துறை அக். 17

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு வைபவம் நாளை காலை 9-30 மணிக்கு கல்லூரி 'மதுரம்' அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். ஆயர் அதி வணக்கத்துக்குரிய பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெற இருக்கும் இவ் வைபவத்தில் தென் இந்திய திருச்சபையின் யாழ் அத்தியட்சாதீன ஆயர் டி. ஜே அம்பலவாணர் தம்பதிகள் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வர். (ஒ-80)

---

# விசேட ஆங்கில வகுப்புகள்

To Help You
Begin, Build up & Enrich Your English

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்கள்!!

ஆரம்பம்; 19-10-1991 9 a.m.

க. பொ. த சா/உ, தொழில்நுட்ப, பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்குரிய

## AN INTEGRATED ENGLISH

[6 மாதகாலப் பயிற்சி]

ஆரம்ப அறிவு குறைந்தவர்களுக்கான

## SPECIAL BASIC ENGLISH

[3 மாதகால துரிதப்பயிற்சி]

- ★ Speech Practice
- ★ Grammar & Usage
- ★ Vocabulary Enrichment
- ★ Practice in Writing
- ● வகுப்புகள் சனி, ஞாயிறு.
- ● அச்சடித்த பாடக்குறிப்புகள்.

**அஸ்ரன் கல்வி நிறுவனம்**

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[இ-0717]

---

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 9 — 1932

மறைவு: 17 — 10 — 1990



## அமரர் மயில்வாகனம் மகேந்திரன்

(உதவி ஆணையாளர், மதுவரித் திணைக்களம், யாழ்ப்பாணம்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

உங்களை என்றும் அன்புடன் நினைவு கூரும்:

தாய், மனைவி, மக்கள், உடன்பிறந்தோர்,

71/3, கச்சேரி, நல்லூர் வீதி
கண்டிக்குளி. (18470)

---

இதோ!

வெளிவந்து வேகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன

# சீலம் இன்டஸ்ரீசாரின்

## ★ நவீன தீபாவளி வாழ்த்து மடல்கள் ★

— விலை விவரம் —

| | | | | |
|---|---|---|---|---|
| No. 1 | சட்டிங் காட் | 100க்கு | — | 1350-00 |
| No. 2 | போட் சட் | 10x7, 100க்கு | — | 1250 00 |
| No. 2 | பேப்பர் காட் | 10x7, 100க்கு | — | 600-00 |
| No 3 | சட்டிங் காட் | " | — | 750 00 |
| No. 4 | போட் காட் | 7x5 " | — | 550-00 |
| No. 5 | சட்டிங் காட் | " | — | 550 00 |
| No. 6 | பெரிய இருமடிப்பு | " | — | 550 00 |
| | பெரிய போஸ் காட் | " | — | 250-00 |
| | சிறிய போஸ் காட் | " | — | 110-00 |
| | சுவாமி போஸ் காட் | " | — | 110 00 |

வாடிக்கையாளரின் கவனத்திற்கு:-

எமது ஸ்தாபனம் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆதலினால் கீழ்க்கண்ட விலாசத்தில் இதே விலையில் வாழ்த்து மடல்களைப் பெற்றுக் கொள்ளலாம்,

ரகுநாதன் பதிப்பகம்,
இல. 3, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

[18364]

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 26 — 05 — 1943

மறைவு: 17 — 09 — 1991



## திருமதி செல்வராசா சரஸ்வதி

குடும்ப ஒளிவிளக்காய் ஒளிவீசி மறைந்து விட்ட எமது குடும்பத் தலைவி சரஸ்வதியே! திடீரென வந்த நோயினால் இவ்வுலக வாழ்வை நீத்து எம்மைப் பரிதவிக்க வைத்தீரே! நீங்காது உம் நினைவு எம் உயிர் உள்ளவரை.

பிரிவால் வாடும்:
கணவன், பிள்ளைகள்.

புத்தூர் மேற்கு. [18480]

---

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இம்மையில்: 20 — 07 — 1916

மறுமையில்: 16 — 10 — 1981



## யோபுப்பிள்ளை எட்வேட் சவுந்தரராஜா

[இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர்]

நானே உயிர்த்தெழுதலும்
ஜீவனுமாயிருக்கிறேன் - என்னை
விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.
யோவான் 11 : 25

அன்பு. மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

யாழ்ப்பாணம். [18478]

---

# அவசர பொதுக்கூட்டம்

இடம்:- நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்

காலம்:- 18 - 10 - 91 [வெள்ளி] 4 00 மணி.

அவசர முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளமையால் யாழ். மாவட்ட அனைத்துக் கோட்டங்களினதும் பொதுச் சபை உறுப்பினர்கள் தவறாது சமூகம் தருமாறு வேண்டுகின்றோம்.

பொது செயலாளர்,
தனியார்
கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

(18475)

---

யாழ். கனகரத்தினம் மத்திய
மகா வித்தியாலய
பழைய மாணவர் சங்க

# வருடாந்த பொதுக்கூட்டம்

20 - 10 - 91 ஞாயிறு காலை 9-00 மணிக்கு வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற உள்ளதால் சகல அங்கத்தவர்களும் சமூகம் தரவும். புதிதாக சேர விரும்புவோர், கல்லூரி அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். சாதாரண அங்கத்தவர்கள் அங்கத்துவத்தைப் புதுப்பிக்கவும்.

வி. எஸ். கனகரத்தினம்,
செயலாளர்.

[18474]

---

# லண்டன் கணக்கியல் வகுப்புக்கள்

## வைகாசி - ஆனி - 1992

| | |
|---|---|
| C. I. M. A. | Stage I |
| A. A. T. | London - Prelim/inter |
| A. A. T. | Sri Lanka - Level I |
| | Level II |
| I. A. B & C. I. A. | Foundation |

ஆரம்பம்: 19 — 10 — 1991

விவரங்களுக்கு;

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE,**

(வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி)
14, சென். பீற்றர்ஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [இ-0728]

---

Jaffna College
Institute of
Technology
VADDUKODDAI.

மரவேலை, கட்டட வேலை

# பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் ஸ்தாபனத்தின் (CARE INTERNATIONAL) உதவியுடன் இலவச பயிற்சி நெறிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன.

காலம்: 2½ மாதங்கள்

ஒழுங்கான பயிலுனர்க்கு:

1. நாளாந்த ஊக்குவிப்புப் படியாக ரூபா 30/- வழங்கப்படும்.
2. ஆரம்பப் பயிற்சியின் பின் 10 மாதங்கள் வேலைத் தளங்களில் தொழிற் பயிற்சி.
3. பயிற்சி முடிவில் இலவச உபகரணப் பொதி.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் நேரிலே வந்து யாழ்ப்பாணக் கல்லூரி, தொழில் நுட்ப நிறுவனம் வட்டுக்கோட்டை காரியாலயத்தில் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளவும்;

விண்ணப்ப முடிவு திகதி: 28 - 10 - 1991
நேர்முகப் பரீட்சை: 29 - 10 - 1991
மு. ப. 9-00 மணி

[இ-0824] - பணிப்பாளர்.

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கும் தனித்துவமான நிறுவனம்.)

## 93 ஆரம்பம்: 19-10-1991

8-00 மணி

எமது தனித்துவமான ஆசிரியர் குழு:

| | | | |
|---|---|---|---|
| பொருளியல்: | திரு. க. கலாகரன் | இந்துநாகரிகம் / இந்துசமயம் | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| வர்த்தகம்: | திரு. தேவா | தமிழ்: | குழந்தை |
| கணக்கியல்: | திரு. வன்னியசிங்கம் | புவியியல்: | குணராசா |
| அளவையியல்: | திரு. சுப்பிரமணியம் | சரித்திரம்: | விஜயன் |
| அரசியல்: | திரு. சிலன். | | |

மு குறிப்பு:

★ அனுமதிகளை முன்கூட்டியே பெறவும். முதல் 100 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும்

★ 93 ஆண்டு A/L எமது நிறுவனத்தில் கற்கும் மாணவர்களுக்கு O/L மீட்டல் வினா-விடை. வகுப்புக்களும் நடைபெறும். [இ-[illegible]]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நவராத்திரிச் சிறப்பு

நவராத்திரி விரதத்தின் இறுதி விழா நாளான விஜய தசமி இன்றாகும். சக்தியின் ஆற்றலையும், மகிமையையும் வியந்து போற்றி, அவள் பாதாரவிந்தங்களைப் பணிந்து அருள்வேண்டி நிற்கும் நவராத்திரிக் காலம் இன்றோடு பூர்த்தியாகிறது.

பிரபஞ்சமெங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருள், யாவற்றிலும் சக்தி வடிவமாக வியாபித்திருக்கிறார்.

அண்ட சராசரங்கள் யாவும் இயங்குவதற்கு ஆதாரமாக இருப்பது சக்தி. அந்தச் சக்திக்கு உறுதுணையாவது ஆற்றல்.

அண்டங்களினது இயக்கத்துக்கும், அங்கு வாழும் சகல சீவராசிகளின் இயக்கத்துக்கும் காரணமும், காரியமும் தேவை. இந்தக் காரணமும், காரியமும் முறையே சக்தியும் ஆற்றலுமாம்.

ஒரு சீவனின் உற்பத்தி, வளர்ச்சி, தொழிற்பாடு ஆகியவை சக்தியின் வெளிப்பாடே. ஆனால் அந்தச் சக்தி கண்ணுக்குப் புலப்படாதது; மெய்யினால் உணரமுடியாதது.

இந்தச் சக்தி [Energy] பரப்பிரம்மத்திலிருந்து பிறப்பது. சக்தி மட்டுமன்றி சடப்பொருளும் [Matter] பரப்பிரம்மத்திலிருந்தே பிறக்கின்றது. சக்தியும், சடப்பொருளும் சேரும் போது தான் சீவன்கள் உற்பத்தியாகின்றன.

பிரபஞ்சம் எங்கும் வியாபித்திருக்கும் பரப்பிரம்மத்தின் சக்தியை, விஞ்ஞானிகள் தமது பாவனைக்கும், ஆராய்ச்சிக்கும் ஏற்பப் பல பரிமாணங்களைக் கொடுத்து அழைக்கின்றனர்.

விஞ்ஞானத்தில் கூறப்படும் காரணமும், காரியமும் — சக்தியும் ஆற்றலும் — சக்தியும், சடப்பொருளும் — இந்து சமயத்தில் சக்தியும் சிவனுமாகக் காண்பபடுகின்றன; உருவகிக்கப்படுகின்றன. ஆதலால் தான் சக்தி இன்றேல் சிவம் இல்லை; சிவம் இன்றேல் சக்தி இல்லை என்று கூறப்படுகிறது.

பரம்பொருளையே அன்னையாய் வரித்து வணங்குவதாகவும் அர்த்தம் கொள்ளலாம். சக்திக்குப் பல வடிவங்களும், பெயர்களும், குணங்களும் இந்து சமயத்தில் வகுக்கப்பட்டுள்ளன.

நவராத்திரி காலத்தில் ஆற்றல், செல்வம், அறிவு ஆகிய மூன்றையும் வேண்டித் துதிக்கின்றோம்; பூசிக்கிறோம்; இறைஞ்சுகிறோம்.

திண்ணிய நெஞ்சத்தை, வீரத்தை வேண்டித் துர்க்கையைத் துதிக்கின்றோம், தீதில்லாத செல்வத்தை, நெறிவந்தசெல்வத்தைஈந்து அருளுமாறு இலட்சுமி தேவியை இறைஞ்சுகின்றோம். தெளிந்த நல்லறிவை, துறைதோய்ந்த கல்வியை, ஞானத்தை அருளுமாறு வாணியை வேண்டுகிறோம்.

தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை என்பது தத்துவம் பொதிந்த வாக்கு. தாயிடம் இலகுவாகவும். இயல்பாகவும் அன்பு செலுத்தலாம். அதே போல அன்னையும் தனது பிள்ளைகளை — பக்தர்களை — பரிவோடும், பாசத்தோடும் சீராட்டி, பாராட்டி, வளர்த்து, வழிகாட்டுவாள்.

ஈழத்தமிழர்களின் இன்றைய நிலையில், வேறு எப்போதும் இல்லாத அளவுக்கு வீரமும், கல்வியும், செல்வமும் தேவைப்படுகின்றன. அதனைக் கருத்திற்கொண்டு, இல்லந்தோறும் நவராத்திரி விழா கொண்டாடப்பட்டதற்கு நல்விளைவு வரும், நயம் நல்கும், வெற்றி தரும் என்று நம்புவோமாக.

# நெடுந்தீவுப் பயணிகள் 500 பேர் பெரும் அவலம்

நெடுந்தீவைச் சேர்ந்த ஐநூறுக்கும் மேற்பட்ட பயணிகள் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாகத் தங்கள் வீடுகளுக்குத் திரும்பமுடியாமல் நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளனர்.

குறிகாட்டுவான் - நெடுந்தீவுப் படகுச்சேவை நிறுத்தப்பட்டிருப்பதால் அவர்கள் அக்கரைக்கு - தங்களின் சொந்த ஊருக்கு - திரும்ப முடியாமல் பெரும் அவலப்படுகின்றனர். குறிகாட்டுவான் பகுதியில் படகுச் சேவைக்காகக் காத்துநின்றவர்கள் அங்குள்ள பாதக நிலையால் குறிகாட்டுவான் பகுதி மக்களுடன் சேர்ந்து யாழ். நகருக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இது குறித்துத் தாம் கொழும்புக் கூட்டுப்படைத் தலைமையகத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்திருப்பதாக யாழ் அரசாங்க அதிபர் உதயனுக்குத் தெரிவித்தார்.

நெடுந்தீவுக்கான படகுச் சேவை தடங்கலின்றி நடப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக்குழு மூலமாக நேற்றுச் செய்தி அனுப்பியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [அ-111-5]

# கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையில் மாநகர ஊழியர்கள்

யாழ்ப்பாணம், அக். 17

ஆபத்து வேளையில் பணிபுரிந்தாற்கான ஊக்குவிப்புப்படி கிடைத்த போதிலும், யாழ். மாநகர சபை ஊழியர்களுக்கு அது இன்னும் கிடைக்கவில்லை.

கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத இந்நிலைக்கு இலங்கை வங்கிக் கிளையில் பணம் இல்லாமையே காரணம் என்று சொல்லப்படுகிறது.

ஊக்குவிப்புப் படிக்குரிய நிதி வடக்கு—கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தினரால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது ஆனால் காசோலையை மாற்றுவதற்கு போதிய பண வசதி இலங்கை வங்கியின் யாழ். கிளையில் இல்லாததால் மாநகர சபையால் கொடுப்பனவுகளை வழங்க முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [அ-126]

# யாழ். மாவட்ட சாரணரின் பவள விழா நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், அக். 17

யாழ் மாவட்ட சாரணர்களின் 75 ஆவது ஆண்டு பவள விழா 'யாழ் ஜோதி' விழாவாகக் கொண்டாடப்படவுள்ளது. இதனையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

சாரணர்களின் யாழ்ஜோதி ஆரம்பவிழா இன்று பிற்பகல் 4 மணிக்கு சாரணர் நிர்வாகக் குழுத் தலைவர் திரு. சி. வி. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவத்துறைத் தலைமை பேராசிரியர் திரு. பாலகிருஷ்ணனும் சிறப்பு விருந்தினராக 'பாலம்' பணிமனைப் பொறுப்பாளர் திரு. சோழனும் [சலீம்] கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய விழாவை முன்விட்டு சாரணர் ஜோதிச் சக்கர வண்டி ஊர்வலம் ஒன்று நடைபெறுகிறது. பிற்பகல் 2-30 மணியளவில் யாழ். செயலகத்துக்கு முன்பாகவுள்ள சாரணன் சிலையடியில் இருந்து ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் மாலை 4 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியை வந்தடையும். (உ-5)

# தனியார் வைத்தியசாலைகளுக்கு
# கொழும்பிலிருந்து மருந்து தருவிக்க புதிய முயற்சி

யாழ்ப்பாணம், அக். 17

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரி ஊடாக கொழும்பில் இருந்து மருந்து வகைகளைத் தருவித்து குடாநாட்டில் உள்ள தனியார் வைத்தியசாலைகளுக்கும், தனியார் மருத்துவர்களுக்கும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியும் இந்த விடயத்தில் பெறப்படும்.

கடந்த திங்கட்கிழமை வண்ணை மேற்கு வைத்தியசாலையில் நடைபெற்ற வட இலங்கை மருத்துவச் சங்கத்தின் கலந்துரையாடலில் இது தொடர்பாக ஆராயப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

டாக்டர் ரி. செங்காதரன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பிரதிநிதி ஒருவரும் கலந்து கொண்டார்.

தற்போது சில தனியார் டிஸ்பென்சரிகள், பார்மஸிகள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவிக்கும் மருந்து வகைகளையே தனியார் வைத்தியசாலைகள் வாங்கி நோயாளர்களுக்கு விநியோகிக்கின்றன.

தனியார் வைத்திய சாலைகள் மருந்து வகைகளுக்கு அதிக விலை கொடுப்பதால் சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்களும் அதிக விலைக்கே இதனை பெற வேண்டிய நிர்ப்பந்தம் இருந்து வருகிறது.

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை மூலம் மருந்து வகைகளை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் பெறும் முயற்சி வெற்றி அளிக்குமானால் தனியார் வைத்திய சாலைகளை நாடும் நோயாளருக்கு ஓரளவு நிவாரணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

## அங்குரார்ப்பணம்

தொழும்புத்துறை, அக். 17

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன ஒன்றிணைந்து பிரதேச சபை சமாசம் என்ற பெயரில் இயங்க உள்ளன.

இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறும். [இ-30]

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம் அக் 17

சகல தொழிற்துறை அதிபர்களையும் நாளை காலை 8.30 மணிக்கு கோட்ட அலுவலகத்தில் கூடுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. ... கேட்டுள்ளார். ...

## சந்திப்பு

யாழ்ப்பாணம், அக். 17

தீவுப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ள சகல ஆசிரியர்களையும், அதிபர்களையும் நாளை மறுதினம் (சனிக்கிழமை) காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் சந்திக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஒ)

## தொழில் நுட்ப டிப்ளோமா பயிற்சி

யாழ்ப்பாணம், அக் 17

மொறட்டுவப் பல்கலைக்கழகம் நடத்தும் தொழில் நுட்பத் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், இரசாயனம் ஆகிய பாடங்களில் மூன்று பாடங்களை ஒரே தடவையில் அல்லது நான்கு பாடங்கள் இரண்டு தடவைகளில் சித்தியடைந்த மாணவர்கள் இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

மாவட்ட ரீதியில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர். பல்கலைக்கழகம் வைக்கும் தெரிவுப் பரீட்சையில் அதிக புள்ளிகள் எடுப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆங்கில மொழி மூலம் மட்டுமே போதனை நடைபெறும்.

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 21 ஆம் திகதி வரை அனுப்பி வைக்கலாம்.

விண்ணப்பம் அனுப்புவது சம்பந்தமான மேலதிக விவரங்களை உதயன் பணிமனையில் பார்வையிடலாம். (அ)

## டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம்

கொழும்பு. அக். 17

நாடெங்கும் "டெங்கு" காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர். (த)

## பி. ப. 3 மணிக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காரியங்களைச் செய்ய வேண்டும்.

இன்றைய இராகு கால நேரத்தில் துர்க்கைக்குப் பூசை வழிபாடு செய்தால் பெண்களுக்குள்ள பலவித தோஷங்களும் நீங்கும்.

## தாக்குதல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ராட்சி செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு ஊர்காவற்றுறை மற்றும் பலாலி கடற்பிராந்தியங்களில் இருந்து கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியதாகவும்—

காரைநகர். ஊர்காவற்றுறை நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு போன்ற முகாம்களில் இருந்தும் ஷெல் தாக்குதல்கள் திடீர் திடீரென நடத்தப்பட்டு வருவதாகவும்— செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்பகுதிகளில் படையினரின் ரோந்து நடவடிக்கை தீவிரம் அடைந்துள்ளதாகவும் எமது செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்

[ஓ-117-15-28-111-181]

## இராணுவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த சில தினங்களாகத் தமது உயிருக்குப் பயந்து இத்தீவுப் பகுதி மக்கள் தப்பி ஓடுகின்றார்கள் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இச் செய்தியை பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமையகம் நேற்று மறுத்தது. [உ-த]

# விஞ்ஞான, கணித உதவி ஆசிரியர்கள் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு

கொழும்பு. அக். 17

விஞ்ஞான, கணித உதவி ஆசிரியர்களையும், பட்டதாரி உதவி ஆசிரியர்களையும் பதவியில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை தேசிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு கோரியுள்ளது.

3 500 விஞ்ஞான, கணித உதவி ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளார்கள். விண்ணப்பதாரிகள் ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில் ஒரே அமர்வில் 3 விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

வயது 18 இற்கும், 35 இற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்தினம் நவம்பர் மாதம் 11 ஆம் திகதியாகும்.

பரீட்சைகள் ஆணையாளர் நடத்தும் போட்டிப்பரீட்சை மூலம் உதவி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். பல்வேறு உதவி அரசாங்க பிரிவுகளிலுமிருந்து பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்கள் அந்தந்த வட்டாரங்களிலுள்ள வெற்றிடங்களுக்கு ஏற்ப நியமனம் வழங்கப்படும்.

மேலதிக விவரங்கள் அக்டோபர் மாதம் 18 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களை விட சேர்க்கப்பட இருக்கும் 2 000 பட்டதாரி உதவி ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்; இவர்களின் வயது 40 இற்கு மேல் இருக்கக்கூடாது.

இவர்களும் பரீட்சை ஆணையாளர் நடத்தும் போட்டிப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்ற வேண்டும். பெறுபேறுகளின் அடிப்படையில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு இந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

பட்டதாரி உதவி ஆசிரியர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 25 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். [த]

# "சார்க்" மாநாட்டின் போது
# பாதுகாப்பு நடவடிக்கைக்கு 10 ஆயிரம் பொலிஸார்!

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெற இருக்கும் "சார்க்" உச்சி மாநாட்டின் போது பாதுகாப்பு நடவடிக்கைகளில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இது தொடர்பாக கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் சார்க் செயலக விசேட பொலிஸ் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஜே. டி. எம். ஆரியசிங்க தலைமை வகிக்கிறார்.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் பொலிஸ்படையினர் பல்வேறு பிரிவுகளின் நடவடிக்கைகளை இந்தப் பிரிவு ஒருங்கிணைக்கும்.

அத்துடன் கொழும்பில் 5 நட்சத்திர ஹோட்டலில் நாடுகளின் தலைவர்கள் தங்கியிருக்கும் போது தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த நாடுகளின் தலைவர்களுக்கு சிறந்த பாதுகாப்பை அளிக்கும் வகையில் அதிநவீன எலெக்ரோனிக் உபகரணங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளார்.

தலைவர்களும், குழுவினரும் செல்லும் வீதிகளிலும் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படும். (த)

## இவ்வருட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மாவீரர் தினமான நவம்பர் 27 ஆம் திகதி மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக மக்கள் உறவு—கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## சபாநாயகர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாம் பதவி விலகியதான செய்தி எவ்வித ஆதாரமும் அற்றதென்றும், தாம் அந்தப் பதவியில் தொடர்ந்து நீடிப்பதாகவும்—

அல்ஹாஜ் முகம்மது இந்திய வானொலியின் கொழும்புச் செய்தியாளரிடம் தெரிவித்ததாக அந்த வானொலி நேற்று அறிவித்தது.

இதேவேளை—

இந்திய வானொலியும் தொலைக்காட்சியும் தவறான செய்தி வெளியிட்டமை குறித்து, கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு என். என். ஜா, சபாநாயகர் அல்ஹாஜ் முகம்மதுவிடம் மன்னிப்பு கோரியதாகவும் அறிவிக்கப்படுகிறது. [ஈ-த]

## படையினர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முகாமை கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை விடுதலைப்புலிகள் தாக்கி அழித்தனர் என்பதும்—

அந்தத் தாக்குதலின் போது 21 படையினர் கொல்லப்பட்டதோடு, நவீன ரக ஆயுதங்களும் இராணுவத்தினரின் எட்டு சடலங்களையும் புலிகள் கைப்பற்றினர் என்பதும் தெரிந்தவையே.

இந்தத் தாக்குதல் குறித்து இராணுவ வட்டாரங்கள் முன்னர் தகவல் தருகையில்— இராணுவ அணி ஒன்றின் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டனர், 12 படையினர் படுகாயமடைந்தனர் என்று மட்டுமே அறிவித்திருந்தது.

ஆனால் நேற்று திடீரென 8 படையினரைப் புலிகள் சிறைப்பிடித்து வைத்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [ஓ-எ]

## ஆளும் கட்சி...

[1-ஆம் பக்கத் தொடர்ச்சி]

பின் அறிவிக்கப்பட்டது.

அமைச்சர் பதவி எதனையும் வகிக்காத இந்த எம். பிக்கள் தொண்டு அடிப்படையில் பணிபுரிவர் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆனால்—

ஆளும் கட்சி எம். பிக்கள் சிலர் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிராக எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து செயல்படுவதைத் தடுக்கவும்—

அந்த எம். பிக்களைத் திருப்திப்படுத்தவும்—

ஆட்சியில் அவர்களுக்கும் பங்கு இருப்பது போல உணர்த்தி, அவர்கள் எதிரணிப் பக்கம் திரும்ப விடாமல் செய்யவும்—

இந்தத் திட்டத்தை ஜனாதிபதி செயற்படுத்தியிருப்பதாக செய்தி ஏஜென்சிகள் சுருக்கு வெளியிட்டன.

[உ-எ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L 93

19 - 10 - 1991 முதல்

நாவலரியல்

ஐங்கரநேசன்

யூனிவேர்சல்

கந்தர்மடம் ——— யாழ்ப்பாணம்.

(ஜ/0806)



வேலணை

சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி

மத்திய மகா வித்தியாலயம்

## பழைய மாணவர் சங்கம்

மேற்குறிப்பிட்ட சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 20-10-91 ஆம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு யா/வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும். பழைய மாணவர்களும், ஆசிரியர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றார்கள்.

கா. பாலகிருஷ்ணன்,
செயலாளர்.

(18476)



அமெரிக்கன் மிஷன் கல்லூரி

உடுப்பிட்டி.

## பெற்றோர் தின விழாவும், பரிசளிப்பும்

பிரதம விருந்தினர்:

திரு. S. S. செல்வத்துரை B.Sc. (Dip-in-Ed.) Lond.
(முன்னைநாள் அதிபர்)

காலம்: இன்று 17 - 10 - 1991 [வியாழன்]
மாலை 5-00 மணி.

இடம்: கல்லூரி மைதானம்.

அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

- அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

(18469)



யாழ்ப்பாணம்

பல்கலைக்கழகம்.

## வெளிவாரி பட்டப் படிப்பு

துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பை ஆரம்பித்து வைக்கும் வைபவமும், 1990/91 ஆம் கல்வியாண்டு வெளிவாரி மாணவர்கள் பல்கலைக்கழக புதுமுக நிகழ்ச்சியும் 1991 - 10 - 22 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளன. வெளிவாரிப்பட்டப் படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்கள், இந்த நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளும்படி கோரப்படுகின்றனர். நிகழ்ச்சிகள் இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ளன

முதல் அமர்வு — முதற்கலை மாணவர்கள்—
காலை 9-00 — மு.ப. 11-00

இரண்டாவது அமர்வு:— முதல்வர்த்தக மாணவர்கள்
முற்பகல் 11 30 — 1-00

வெளிவாரி மாணவர்கள் தமது அனுமதி அட்டையை 20 - 10 - 1991 வெளிவாரிப்பதிவுப் பிரிவில் பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதி அட்டை இல்லாது வெளிவாரி மாணவர்கள் நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள முடியாதென்பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி/0825)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# நிவாரண உதவி வழங்க செஞ்சிலுவை சங்ககிளைகள்

யாழ்ப்பாணம், அக். 17

வவுனியா நகரம், மன்னார் நகரம் ஆகியவற்றுக்கு வெளியே வாழும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க செஞ்சிலுவைச் சங்கக்கிளைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு போதிய அரச நிவாரணமோ, தொண்டர் நிறுவன நிவாரணமோ கிடைப்பதில்லை என்று தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து வவுனியா நகருக்கு வெளியே வாழும் மக்களுக்கு உதவும் வகையில் நெடுங்கேணியிலும் —

மன்னார் நகருக்கு வெளியே வாழும் மக்களுக்கு உதவும் வகையில் மடுவிலும் - செஞ்சிலுவைச் சங்கக் கிளைகள் திறக்கப்படவிருப்பதாக அந்த சங்கத்தின் வடக்கு-கிழக்கு மாகாண நிவாரணப் பணிப்பாளர் திரு. கி. தயாளதேவா தெரிவித்தார். (த-3)

# ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்க விரும்பும் பிரதிநிதிகள்

கொழும்பு, அக். 17

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள ஐந்தாவது 'சார்க்' மாநாட்டுக்கு வருகை தரவுள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் தாங்கள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலேயே தங்க வைக்கப்பட வேண்டுமென கோருகின்றனராம்.

அண்மையில் 10 கோடி ரூபா செலவில் அதி நவீன வசதிகள் பொருத்தப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட அரச விருந்தினர் மாளிகையான 'விஜம்பர'வில் [முன்பு ஒக்லண்ட் ஹவுஸ்] இவர்களைத் தங்க வைக்க மாநாட்டு ஒன்றிணைப்பு அதிகாரிகள் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லையெனத் தெரிகிறது.

இந்த அதிகாரிகளால் அடையாளமாக அனுப்பப்பட்ட பங்களாதேஷ் கூட இந்த ஏற்பாட்டை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டது.

எனவே மாநாட்டில் பங்குபற்றவுள்ள சுமார் 220 பிரதிநிதிகளும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலேயே தங்க வைக்கப்படவுள்ளனர்.

இம்மாநாட்டை நடத்த இலங்கை அரசுக்கு 53 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

## அஷ்ரப்புக்கு மந்திரி பதவி?

கொழும்பு, அக். 17

இந்த வாரத்தில் மேற்கொள்ளப்பட இருப்பதாகக் கூறப்படும் அமைச்சரவை மாற்றத்தின் போது, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பும் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்படலாமென முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

முன்பு அஷ்ரப்புக்கு பாராளுமன்றத்தில் தினமும் தொல்லை கொடுத்தவர்களான ஏ. எச். எம். அஸ்வர், அப்துல்காதர், வர்த்தக அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் ஆகியோர் தற்போது அஷ்ரப் ஜனாதிபதியுடன் நெருங்கி வந்துள்ளதை அடுத்து, அமைதியாகி விட்டனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-10)


# 93 A/L

★ [விஞ்ஞான பாடங்கள் மட்டும்]

எமது முழுமையான ஆசிரியர் குழுவினால்

ஆரம்பம்:

19 — 10 — 1991

[சனி காலை 7 மணி]

ஏமாற்றத்தை தவிர்க்க அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

*NEW MASTER INSTITUTE*

JAFFNA.

(சி-0706)


## திருத்தம்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின், கிராமிய வங்கி முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரி, 14-10-1991 உதயனில் வெளிவந்த விளம்பரத்தில் —

பொது என்ற பகுதியின் (உ) பந்தியில் ''சங்கப் பணியாளருக்கு'' என்பதற்குப் பதிலாக, ''சங்கப் பணியாளருக்கு'' என்று தவறுதலாக பிரசுரமாகி விட்டது திருத்தி வாசிக்கவும்.


# NEW SCIENCE HALL

KANNATHIDY ROAD, JAFFNA.

## 93 - A/L

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| பௌதிகவியல் | ... | திரு. சோதிலிங்கம் |
| இரசாயனவியல் | ... | திரு. மணியம் |
| தாவரவியல் | ... | திரு. குணசீலன் |
| விலங்கியல் | ... | திரு. தம்பிராஜா |
| தூய பிரயோக-கணிதம் | ... | திரு. வெக்டர் |
| பௌதிகவியல் | ... | திரு. கணேசன் |
| இரசாயனவியல் | ... | திரு. சண் |
| விலங்கியல் | ... | திரு. ஈஸ்வரதாசன் |
| தூய-பிரயோக-கணிதம் | ... | திரு. சந்திரமோகன் |

ஆரம்பம்: 19 - 10 - 1991

(சி-0827)


# அமெரிக்க உயர் நீதிமன்றத்தில் சர்ச்சைக்குரியவருக்கு நீதிபதி பதவி

வாஷிங்டன், அக். 17

அமெரிக்க உயர்நீதிமன்றின் நீதிபதியாக திரு. கிளாரன்ஸ் தொமஸ் என்பவரை அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் நியமித்திருப்பதை அமெரிக்க செனட் அங்கீகரித்து விட்டது.

திரு. கிளாரன்ஸ் தொமஸ் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படுவது தொடர்பாக எழுந்த சர்ச்சை அவரது நியமனத்தை தாமதப்படுத்தியது.

இது பற்றி விசாரித்த செனட்டில் 52 உறுப்பினர்கள் தொமஸுக்கு ஆதரவாகவும், 48 பேர் எதிராகவும் வாக்களித்தார்கள். (த)

## யாருடையது?

யாழ்ப்பாணம், அக். 17

யாழ். மாநகரசபைப் பகுதிக்கு அப்பால், சற்றுத் தொலைவில், கண்டெடுக்கப்பட்ட பெண்கள் காசுப்பை (பேர்ஸ்) ஒன்று உதயன் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் தகுந்த ஆதாரங்களைத் தெரிவித்து அதனை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (அ)

## சம்பள உயர்வு

கொழும்பு, அக். 17

தாதிமார்களுக்கு விரைவில் சம்பள உயர்வு கிடைக்கும்.

சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் இது தொடர்பாக விரைவில் அமைச்சரவைக்கு சிபார்சு செய்யவுள்ளார் என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [த]


# மரண அறிவித்தல்கள்

## தம்பு அருணையா
(ஓய்வுபெற்ற பொறியியலாளர், மலேஷியா)

காரைநகரைச் சேர்ந்த தம்பு அருணையா, 12 - 10 - 91 சனிக்கிழமை காலமானார். அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், திருமகள், இராசலக்ஷ்மி, ஜெயமணி, அருள்சோதி, ரோகிணி, ரேவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணமூர்த்தி, பொன்னையா, குமாரசாமி, சிவநேசி, ஜோதீஸ்வரன், சித்திரவடிவேல் ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி அருளம்மா நாகலிங்கம், திருமதி நேசம்மா இரத்தினலிங்கம், இராசரத்தினம், திருமதி நல்லம்மா இராமநாதன், திருமதி மனோன்மணி நல்லதம்பி ஆகியோரின் சகோதரனுமாவார்.

ஈமக்கிரியைகள் காரைநகரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:
ஆர். கிருஷ்ணமூர்த்தி
[மருமகன்]

82/2, குறுக்கு வீதி,
நல்லூர். [18485]

## திருமதி ஞானம்மா விக்ரர் இம்மானுவேல்

இல. 4, கோவில் வீதி ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட திருமதி ஞானம்மா விக்ரர் இம்மானுவேல் 14-10-1991 அன்று கனடாவில் காலமானார். இவர் விக்ரர் இம்மானுவேல் அவர்களின் அன்பு மனைவியும், குசைப்பிள்ளை-அன்னம்மாவின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற தம்பிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், அன்ரன், Dr. சகாயமாமா, சத்தியபாமா, நிர்மலபாமா, ராஜ்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், பேரதிரா ராஜ்கோனின் அன்பு மாமியாரும், மேரி லில்லி (யா/ப. நோ. கூ. சங்கம்), கிளி, சேவியர் (மாநகர சபை, யாழ்ப்பாணம்), புஷ்பம் (யா/ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மரியநாயகம், சின்னராசா, கணேஸ்வரி, நவரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் கனடாவில் இடம்பெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

125, Lawton BLVD - 508
Toronto, Ontario.
CANADA.
M4V2A1

தகவல்:
எஸ். எவ். சேவியர்
இல 4 கோவில் வீதி ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(18132)

## முத்துத்தம்பி பாலசிங்கம் (R. M. P.)

வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த மு. பாலசிங்கம் (R M P) 16—10—91 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற நவமணியின் அன்புக் கணவரும் சித்திரரூபி, லாவண்யரூபி, பாலேந்திரா, பாலச்சந்திரன், பஞ்சரூபி, பாலலோசனன் (முரசொலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநேசன் அம்பாபிரபவி, புஷ்பரஞ்சினி, பிறேமதேவா, நீலிமா ஆகியோரின் அன்பு மாமனாரும், பவன், சதீஸ், யுகன், தாரங்கி, இந்து, அனுஷியா, அஞ்சலா, தாருஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார், ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (17-10-91) அன்னாரின் இல்லத்தில் காலை 10-00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

31, சிவப்பிரகாசம் வீதி,
ஐயனார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க. சிவகெங்கன்
சிற்றிமரீயன் சேவிசஸ்

[18488]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org